பிரஸார் பாரதி

இந்திய வானொலி, சென்னை-4

17 04 2025 **THURSDAY** 12 40 **PM**

ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. நக்ஸல் தீவிரவாதம் அடுத்த ஆண்டு மார்ச் மாதத்திற்குள் முற்றிலுமாக ஒழிக்கப்படும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

2. பாதுகாப்புத்துறையில் சுயசார்பு இலக்கை எட்டி தளவாட ஏற்றுமதியிலும் இந்தியா முன்னோடியாக திகழ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

3. சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை பிறந்த நாளையொட்டி தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் உள்ளிட்ட தலைவர்கள் அவருக்கு மரியாதை செலுத்தியுள்ளனர்.

4. சென்னை அருகே 1,882 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள செயற்கை நுண்ணறிவு டிஜிட்டல் தரவு மையத்தை முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் இன்று திறந்து வைத்தார்.

5. ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் மும்பை அணி இன்று ஹைதாராபாத் அணியை எதிர்கொள்கிறது.

>>>>>><<<<<<

நக்ஸலைட்டுகளின் நடவடிக்கை அடுத்த ஆண்டு மார்ச் மாதத்திற்குள் முற்றிலும் ஒழிக்கப்படும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

மத்தியப்பிரதேசம், **Neemuch** பகுதியில் நடைபெற்ற மத்திய ரிசர்வ் காவல்படை தின விழாவில் பேசிய அவர், தீவிரவாதிகள் மற்றும் நக்ஸலைட்டு ஒழிப்புப் பணியில் இந்தப் படையினர் மிக முக்கிய பங்காற்றுவார்கள் என்று கூறினார்.

குறிப்பாக, இந்தப் படையின் **Cobra** பிரிவினரின் செயல்பாடு சிறப்பாக உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

மத்திய ரிசர்வ் காவல்படை வீரர்களின் துணிச்சலான செயல்பாடுகளால் நக்ஸலைட்டுகளின் ஆதிக்கத்திலிருந்து நாடு விடுபடும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

முன்னதாக, மத்திய ரிசர்வ காவல்படை வீரர்களின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்ட திரு. அமித் ஷா அங்குள்ள வீரர்களின் நினைவிடத்திலும் மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்.

>>>>>><<<<<<

பாதுகாப்புத்துறை சுயசார்பை நோக்கி வேகமாக முன்னேறி வருவதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் மாநாடு ஒன்றில் கலந்து கொண்டு பேசிய அவர், பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு பாதுகாப்புப் படைகளை நவீனப்படுத்த முக்கியத்துவம் அளித்து வருவதாக கூறினார்.

பாதுகாப்புத் தளவாட ஏற்றுமதியில் உலகின் முன்னணி நாடாக இந்தியா வளர்ச்சியடைந்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நடப்பாண்டை சீர்திருத்தங்களுக்கான ஆண்டாக பாதுகாப்புத்துறை கடைபிடித்து வருகிறது என்றும் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

உணவுப் பொருட்களை நீண்ட நாட்களுக்கு பாதுகாப்பாக வைத்திருக்கும் வகையில், அவற்றை பைகளில் அடைப்பது அவசியம் என்று மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை இணையமைச்சர் திரு. பிரதாப்ராவ் ஜாதவ் தெரிவித்துள்ளார்.

மும்பையில் இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையம் சார்பில் நடைபெற்ற உணவு வர்த்தகம் குறித்த ஆலோசனைக் கூட்டத்தை தொடங்கி வைத்து அவர் பேசினார்,

சுற்றுச்சூழலுக்கு உகந்த வகையில், உணவுப் பொருட்களை பைகளில் அடைத்து விற்பனை செய்வதன் முக்கியத்துவத்தை வலியுறுத்திய அவர், இத்துறையில், நீடித்த தொழில்நுட்பங்களை பயன்படுத்தி, உலகின் முன்னணி நாடாக இந்தியா திகழ நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

மறுசுழற்சி செய்யக்கூடிய மற்றும் உயிரி அடிப்படையிலான தொழில்நுட்பங்களை பின்பற்றுவது அவசியம் எனவும் திரு. பிரதாப்ராவ் ஜாதவ் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

முன்னாள் பிரதமர் சந்திரசேகர் பிறந்த நாளையொட்டி, அவருக்கு பிரதமர் திரு நரேந்திரமோடி மரியாதை செலுத்தியுள்ளார்.

இதுகுறித்து பிரதமர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், தமது அரசியல் வாழ்க்கையில் நாட்டு நலனை முதன்மையாக கொண்டு செயல்பட்டவர் சந்திரசேகர் என புகழாரம் சூட்டியுள்ளார்.

சமூக நல்லிணக்கம் மற்றும் தேச வளர்ச்சியில் அவரது பங்களிப்பு என்றும் நினைவுகூரப்படும் எனவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

சுதந்திரப் போராட்ட வீரர், தீரன் சின்னமலை பிறந்த நாளையொட்டி தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் அவருக்கு மரியாதை செலுத்தியுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், இளம் வயதிலேயே சிலம்பம், மல்யுத்தம், வில்வித்தை போன்ற போர்க்கலைகளில் அனுபவமிக்கவராய் திகழ்ந்த, தீரன் சின்னமலை, ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்தை எதிர்த்து கடுமையாக போரிட்டவர் என்று தெரிவித்துள்ளார்.

தீரன் சின்னமலையின் பிறந்த நாளில், அவரது வீர வரலாற்றை பெருமையோடு போற்றுவதுடன் வருங்கால சந்ததியினருக்கும் எடுத்துரைப்போம் என்று திரு. எல். முருகன் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, சென்னை, கிண்டியில் உள்ள தீரன் சின்னமலை சிலைக்கு, முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் மாநில அமைச்சர்கள், அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி மற்றும் பல்வேறு அமைப்புகளின் தலைவர்களும் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

ஈரோடு மாவட்டம், ஓடாநிலையில் உள்ள தீரன் சின்னமலை மணிமண்டபத்தில் உள்ள அவரது சிலைக்கு தமிழக அரசின் சார்பில் ஆட்சியர் திரு. ராஜகோபால் சுங்கரா மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

>>>>>><<<<<<

மத்திய ஜவுளி அமைச்சகத்திற்கு உட்பட்ட தேசிய கைத்தறி அபிவிருத்திக் கழகம் சார்பில் உத்தரபிரதேசம் நொய்டாவில் சிறப்பு கைதத்றி கண்காட்சி தொடங்கியுள்ளது.

பாரம்பரிய கைத்தறி நெசவுக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த கண்காட்சியில் 13 மாநிலங்களைச் சேர்ந்த நெசவாளர்களின் தயாரிப்புகள் இடம்பெற்றுள்ளதாக மத்திய ஜவுளி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்த கண்காட்சியின் மூலம் நெசவாளர்கள், தங்களது உற்பத்திப் பொருட்களை நுகர்வோருக்கு நேரடியாக விற்பனை செய்யும் வாய்ப்பு கிடைத்துள்ளதாகவும் அந்த அமைச்சகம் கூறியுள்ளது.

இந்த கண்காட்சி இம்மாதம் 24ஆம் தேதிவரை நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

சென்னையை அடுத்த சிறுசேரியில், ஆயிரத்து 882 கோடி ரூபாய் மதிப்பீட்டில் **SIFY** நிறுவனத்தால் அமைக்கப்பட்டுள்ள செயற்கை நுண்ணறிவு டிஜிட்டல் தரவு மையத்தை முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் இன்று திறந்து வைத்தார்.

அந்த நிறுவனத்தின் திறந்தவெளி கேபிள் லெண்டிங் மையத்திற்கும் அவர் அடிக்கல் நாட்டினார்.

புதிதாக திறக்கப்பட்டுள்ள தரவு மையத்தின் மூலம், ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

சத்திஷ்கர் மாநிலத்தில் 22 நக்ஸலைட்டுகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பிஜப்பூர் மாவட்டத்திற்கு உட்பட்ட 3 இடங்களில் இவர்கள் கைது செய்யப்பட்டதாக அம்மாநில காவல்துறை தெரிவித்துள்ளது.

இவர்களிடமிருந்து, ஏராளமான ஆயுதங்கள் மற்றும் வெடிபொருட்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

>>>>>><<<<<<

ஒடிசா மாநில முன்னாள் முதலமைச்சர் பிஜு பட்நாயக்கின் நினைவு தினத்தை ஒட்டி, புவனேஸ்வரில் அம்மாநில சட்டப்பேரவை வளாகத்தில் அமைந்துள்ள அவரது சிலைக்கு முதலமைச்சர் திரு. மோகன் சரண் மாஜி மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

பிஜு பட்நாயக்கின் நினைவிடத்தில் அவரது மகனும், பிஜு ஜனதா தள தலைவருமான திரு. நவீன் பட்நாயக் உள்ளிட்டோர் மரியாதை செலுத்தினர்.

>>>>>><<<<<<

அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்பின் கூடுதல் வரி விதிப்பு நடவடிக்கை, பணவீக்கத்தை அதிகரிக்கத்தான் வகை செய்யும் என்று அந்நாட்டு கருவூலத்துறை தலைவர் திரு. **Jerome Powell** தெரிவித்துள்ளார்.

சிகாகோவில் பொருளாதார மண்டலம் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், இந்த பரஸ்பர வரி விதிப்பு எதிர்பார்த்ததை விட மிக அதிகமாக உள்ளது என்றார்.

இதனால் ஏற்படும் பொருளாதார விளைவுகள், வளர்ச்சி வேகத்தை குறைக்கக்கூடும் என்றும் திரு. **Powell** கூறியுள்ளார்

>>>>>><<<<<<

ஹரியானா மாநிலம், குருகிராம் பகுதியில், நில விற்பனையில் நடைபெற்ற சட்டவிரோத பணப்பரிவர்த்தனை தொடர்பான வழக்கில் அமலாக்கத்துறையினர், திரு. ராபர்ட் வதேராவிடம் தொடர்ந்து மூன்றாவது நாளாக இன்றும் விசாரணை மேற்கொள்டுள்ளனர்.

புதுதில்லியில் உள்ள அமலாக்கத்துறை தலைமை அலுவகத்தில் இந்த விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

>>>>>><<<<<<

மேற்குவங்க மாநிலம், முர்ஷிதாபாதில் நிகழ்ந்த வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக, தேசிய புலனாய்வு அமைப்பின் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று அம்மாநில சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் திரு. சுவேந்து அதிகாரி வலியுறுத்தியுள்ளார்.

கொல்கத்தாவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த வன்முறையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

>>>>>><<<<<<

ராஜஸ்தான், குஜராத் மாநிலங்களின் பெரும்பாலான இடங்களில் இன்று கடுமையான வெப்ப அலை வீசக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நாட்டின் வடமேற்கு மாநிலங்களில் அடுத்த 3 நாட்களுக்கு வெப்பநிலை 2 முதல் 4 டிகிரி செல்சியஸ் அதிகரிக்கக்கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளையில், பீகார், அஸ்ஸாம், மேகாலயா மாநிலங்களில் கனமழையும், சிக்கிம், ஜார்க்கண்ட், ஒடிசா, நாகாலாந்து, மணிப்பூர் மாநிலங்களிலும், கர்நாடகாவின் தெற்கு உட்புறப்பகுதி, கடலோர ஆந்திரப் பிரதேசம், கேரளா, மாஹே, ஏனாம் பகுதிகளிலும் சூறைக்காற்றுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்று அந்த மையம் தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<<

ஐபிஎல் கிரிக்கெட் போட்டியின் இன்றைய ஆட்டத்தில் மும்பை அணி – ஹைதாராபாத் அணியை எதிர்கொள்கிறது.

இப்போட்டி மும்பையில் இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

>>>>>><<<<<<

ஜெர்மனியின் **Munich** –ல் நடைபெற்று வரும் **Bavarian** சர்வதேச டென்னிஸ் சாம்பியன் போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் ரோகன் போபண்ணா – அமெரிக்காவின் **Ben**

**Shelton** இணை இன்று பெல்ஜியத்தின் **Sander –** போலந்தின் **Jan Zielinsky** இணையை எதிர்கொள்கிறது.

**>>>>>><<<<<<**